


நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் பள்ளி கல்வித்துறை சார்பில் நடைபெற்ற வருவாய் மாவட்ட விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களை சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மேயர் ராமகிருஷ்ணன், ரூபி மனோகரன் எம்.எல்.ஏ. துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.10.2024) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மருது பாண்டியர்களின் நினைவு நாள்!

## திருவுருவச் சிலைகளுக்கு அமைச்சர்கள் இன்று மலர் தூவி மரியாதை!

சென்னை, அக் 24 -

மருதுபாண்டியர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள் இன்று (24.10.2024) காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

விருதுநகர் மாவட்டம் அழகாபுரி முக்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த பழனியப்பன் சேர்வைபொன்னாத்தாய் தம்பதியினரின் மகன்களாக 1748ஆம் ஆண்டு பெரியமருதும், 1753ஆம் ஆண்டு சின்ன மருதும் பிறந்தார்கள்.

மருது சகோதரர்கள் படைத்தளப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றனர். அப்போது தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருந்த உறுதியான ஆற்காடு நாணயத்தைத் தன் கை விரல்களினால் வளைக்கக்கூடிய வலிமை பெற்றவராக பெரியமருது இருந்தார். அந்தக் காலத்தில் வளரி என்ற ஆயுதம் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. இவ்வாயுதம் எதிரியைத் தாக்கி வீழ்த்தி வீட்டு மீண்டும் எறிந்த நபரிடமே திரும்பி வரும் ஆயுதம். அது மிகவும் பயங்கரமான வளரி ஆயுதத்தைத் திறமையாகப் பயன்படுத்தும் பயிற்சியில் சிறந்து விளங்கியவர்கள் மருது சகோதரர்கள்.

தந்தை பழனியப்பன் சேர்வை இராமநாதபுரம் அரசவையில் பணி புரிந்தார். மருதுசகோதரர்கள் மன்னர் விஜயரகுநாதரின் மகளான ராணி வேலுநாச்சியாரின் நண்பர்கள் ஆனார்கள். ராணி வேலு நாச்சியார் சிவகங்கை இரண்டாவது மன்னர் முத்துவடுகநாதர் பெரிய உடைய தேவரை மணந்து சிவகங்கை வந்தபோது அவர்களுடன் வந்து அங்கேயே தங்கினர்.

26.5.1772ல் ஆற்காடு நவாப்பிற்கு சிவகங்கை அரசினர் கப்பம் செலுத்தாத காரணத்தினால் சிவகங்கை மீது ஆங்கிலேயர்கள் போர் தொடுத்தனர். சிவகங்கையில் இருந்த நவாப்பின் படைகளும், கும்பனி படைகளும் சேர்ந்து சிவகங்கை மன்னரைத் தாக்கின. இப்போரில் மன்னர் முத்துவடுகநாத தேவர் வீரமரணம் அடைந்தார். எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு ராணி வேலு நாச்சியார், மருதுபாண்டியர்கள் மற்றும் ஹைதர் அலி திப்பு சுல்தான் ஆகியோர் உதவியுடன் சிவகங்கை ஆட்சியை மீண்டும் கைப்பற்றினார்கள். ஆங்கிலேயர்கள் மருதுபாண்டியரைச் "சேர்வைக் காரர்கள்" என்று சிறப்புப் பட்டம் வழங்கி அழைத்தனர்.

பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய சுதந்திரப் போராட்டத்திற்கு மருதுபாண்டியர்கள் தங்கள் படையைச் சேர்ந்த 500 வீரர்களை அனுப்பி உதவி செய்தார்கள். வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்ட பிறகு தப்பிப் பிழைத்த வீரர்கள் காளையார் கோவிலில் காட்டில் மறைந்து வாழ்ந்தனர். இதனால், ஆங்கிலேயருடன் நேரடி போர் என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. மேலும், பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தப்பிய ஊமத்துரை சின்ன மருதுவின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வந்தார்.

16.6.1801ஆம் ஆண்டு சின்னமருதுவால் ஆங்கிலேயரை எதிர்த்து ஒரு பதிவு பிரகடனம் வெளியிடப்பட்டது. அதன் அறிக்கையின் நகல்கள் திருச்சி, திருரங்கம் ஆகிய இடங்களில் காணப்பட்டன. அதில், தமிழக மக்கள் அனைவரும் தங்களுக்குள் உள்ள சாதி, மத வேற்றுமையை மறந்து நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வெள்ளையரை எதிர்த்து ஒன்றுபட்டுப் போராட வேண்டும்; மரணத்திற்கு யாரும் பயப்பட வேண்டாம் என்று கூறப்பட்டிருந்து.

ஆங்கிலேயருடன் நடைபெற்ற போரின் முடிவில் மருதுபாண்டியர்களைச் சிறைப்பிடிக்க ஆங்கிலேயரால் உத்தரவிடப் பட்டது. 19.10.1801அன்று சோழபுரம் காட்டில் மருது சகோதரர்கள் சிறைப்பிடிக்கப் பட்ட பின்னர், 24.10.1801 அன்று மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருது பாண்டியர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் மருது பாண்டியர்கள் திருவுருவச்சிலை களைப் புதிதாக அமைத்து 14.2.2023 அன்று தம் திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24 அன்று மருது பாண்டியர்களின் நினைவு நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் கடைப்பிடிக்கப்படுகிறது.

அதன்படி நடைபெறும் இன்றைய நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டுசிறப்பிப்பார்கள்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.கழக பிரதிநிதிகள் கூட்டம் 26.10.2024 - சனிக் கிழமை மாலை 6.00 மணி, கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

தலைமை : ஜி.செல்வராஜ், (மாவட்ட அவைத்தலைவர்).

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

**பொருள்** : 1. தி.மு.க. மாநில இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நவ.27ல் கொண்டாடுவது குறித்து.

2. வாக்காளர் பட்டியல் - சரிபார்த்தல் மற்றும் சிறப்பு முகாம்கள்.

3. கழக வளர்ச்சிப் பணிகள் - குறித்து.

**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

# ரயில்களில் பட்டாசு எடுத்துச் செல்ல தடை!

சென்னை, அக். 24 -

தீபாவளியை யொட்டி ரயில்வே பாதுகாப்பு படை அதிகாரிகள் கூறியதாவது: ரயில்களில் பட்டாசு உள்ளிட்ட வெடி மருந்து, எரி பொருட்களை கொண்டு செல்ல தடை விதிக்க ப்பட்டுள்ளது.

பெரும்பாலான பயணிகள் பட்டாசுகளை கொண்டு செல்ல முயற்சிப்பதில்லை. இருப்பினும், சிலர் விதிமீறல்களில் ஈடுபடுகின்றனர்.

இதனால், அவர்களுக்கு மட்டுமல்லாமல், மற்ற பயணிகளுக்கும் ஆபத்துஏற்படுகிறது.

விதியை மீறி பட்டாசு கொண்டு சென்றால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவின் 2024 2025 ஆம் ஆண்டுக்கான ஆய்வுக் கூட்டத்தில் , மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் , தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் முன்னிலையில் , தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுத்தலைவர் / அணைக்கட்டு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் மற்றும் குழு உறுப்பினர்கள் க. அசோகன் , எம்.எஸ்.எம்.ஆனந்தன் , உடுமலை கே.ராதாகிருஷ்ணன் , கடம்பூர் ராஜு , மு.பெ.கிரி , ஆ.கோவிந்தசாமி , துரை. சந்திரசேகரன் , ம.சிந்தனை செல்வன் , வி.பி.நாகைமாலி , த.வேலு , முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா ஆகியோர் தணிக்கைப் பத்திகள் மற்றும் பொது நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து தொடர்புடைய அரசுத் துறை அலுவலர்களுடன் விவாதித்தனர் .



மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகில் உள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் நினைவிடத்தில் தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் மற்றும் கழகத்தினர், குடும்பத்தினர் உள்ளனர்.

## சென்னையில் வசிக்கும்

# பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம்!

சென்னை, அக்.24-

சென்னையில் வசிக்கும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம் கொண்டுவரப்படும் என சமூக நலத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு அரசு, பெண்கள் நலன், பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தி வருகின்றது. அவற்றோடு, பெண்களின் நலனை உறுதி செய்யும் விதமாக விடியல் பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, தோழி விடுதிகள், கைம் பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கியது.

புதுமைப்பெண் திட்டம் போன்ற பல்வேறு புதிய மகளிர் நலத் திட்டங்களை செயல்படுத்தி, பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் முன்னேற்றத் திற்கு வழிவகை செய்துள்ளது.

பெண்களின் பாதுகாப்பில் தமிழ் நாடு சிறந்து விளங்குகின்றது, அதனை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், ஒரு புதிய முன்னெடுப்பாக 'இளஞ்சிவப்பு ஆட்டோக்களை' தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக பயணிக்க, பெண் ஓட்டுநர்கள் மூலம் 250 ஆட்டோக்கள் சென்னை மாநகரில் இயக்கப்பட உள்ளன.

## சமூகநல ஆணையர் அறிவிப்பு!

அவசர காலங்களில் புகார் பெறப்பட்டவுடன், காவல் துறையின் மூலம் விரைவான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு ஒவ்வொரு இளஞ்சிவப்பு ஆட்டோவிலும், பெண்களின் பாதுகாப்பிற்காக காவல்துறை உதவிஎண்களுடன்இணைக்கப்பட்ட ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்டிருக்கும்.

பெண்கள் சுய தொழிலில் சிறந்து விளங்க ஊக்கப்படுத்தவும், ஓட்டுநர் உரிமம் பெற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இத்திட்டம் வழிவகை செய்யும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தேவையான தகுதிகள்:

i. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

ii. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

iii. 25 வயது முதல் 45வயதிற்குள் இருக்க வேண்டும்.

iv. 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

iv. ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

v. சென்னையில் குடியிருக்க வேண்டும்

இதற்கென, சென்னையில் உள்ள 250 பெண்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசு CNG/Hybrid ஆட்டோ வாங்க மானியமாக வழங்கும். ஆட்டோ வாங்க தேவைப்படும் மீதி பணத்திற்காக வங்கிகளுடன் இணைக்கப்படும்.

சென்னையில் உள்ள தகுதியான பெண் ஓட்டுநர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை சென்னை மாவட்ட சமூகநல அலுவலருக்கு, 8வது தளம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை - 600 001 என்ற முகவரிக்கு 23.11.2024 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

இவ்வாறு சமூகநல ஆணையர் அறிவித்துள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!

கடலூர், அக். 24 -

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் 25.10.2024



அன்று மாலை 3.30 மணியளவில் நடைபெறுகிறது.

அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள் தொ.மு.ச. நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக மூத்த நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடுவது குறித்து.

2. தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுகம்.

3. கழக ஆக்க பணி.

இவ்வாறு அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பந்தல்குடி கால்வாய் மற்றும் அதனை சுற்றியுள்ள கோரிப்பாளையம், செல்லூர் பகுதி தெருக்களில் மழை வெள்ள பாதிப்புகளை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., நேரில் ஆய்வு மேற்கொண்டு, தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றும் பணிகள் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளுடன் ஆலோசித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கூறி பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை செய்திடுமாறு கழகத்தினரையும் அறிவுறுத்தினார்.